# சாளரம்

# Chāḷaram

தை – பங்குனி January - March 2016
ஒளி-09 கீற்று- 01

இது ஒரு எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு.

© Essex Tamil Society 2016

அனைவருக்கும் எமது பொங்கல், புத்தாண்டு வாழ்த்துக்கள். பிறந்திருக்கும் இப் புத்தாண்டு இயற்கை அனர்த்தங்களோ அன்றி பயங்கரவாத அழிவுகளோ இல்லாமல் இருக்கவேண்டுமென்று அந்த ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் நத்தார் விடுமுறை தினங்களை இனிதே களித்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

வழமைபோல இவ்வாண்டும் எமது தமிழ்ப் பாடசாலையின் தமிழ்த்திறன் போட்டிகள் எதிர்வரும் மாசி மாதம் (February) நடைபெறவுள்ளன. எனவே பெற்றோர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். தயவு செய்து உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள உதவி செய்யுங்கள், ஊக்கமளியுங்கள். இத்தமிழ்த் திறன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் எமது வருடாந்தப் பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்படும். போட்டிகளுக்கான விபரங்கள், விண்ணபப்படிவம் அனைத்தும் மின்னஞ்சலினூடாக அனுப்பப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தை 22.01.2016.

எமது நாட்காட்டியில் அனைத்து நாட்களும் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் திறன் போட்டிகள் நடைபெறும் நாட்களில் போட்டிகளில் பங்குபற்றாத மாணவர்களுக்கு வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுவதுடன் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கும் போட்டி நேரத்தைத் தவிர மற்றய நேரம் வழமையான வகுப்புக்கள் நடைபெறும் என்பதை உறுதிசெய்கின்றோம்.

கடந்த தவணையின் இறுதி நாட்களில் உங்களுக்குத் தந்த அறிவித்தலுக்கமைய தமிழ்ப் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அனைவரும் மாலை 5.30 மணிக்குமுன்பாக வருமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தமிழ்ப்பாடசாலை நடைபெறும் நேரங்களில் முன் வாயில் கதவு மூடப்பபட்டேயிருக்கும். பெற்றோர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். மாலை 5.30 மணிக்குப் பின்னர் வரும் மாணவர்கள் உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் கைத்தொலைபேசி எண்ணு டன் தொடர்பு கொண்டால் வாயில்கதவு திறக்கப்படும். எனவே தயவு செய்து பொறுமையுடன் நின்று பிள்ளைகளை உள்ளே அனுப்பி உதவி செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## தமிழ்த்திறன் போட்டி 2016

12.02.2016 + 26.02.2016

Details have been sent through E-mail

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்

| | |
|---|---|
| 08.01.2016 | தவணைக்கான பாடசாலை ஆரம்ப நாள் (Start of Academic Term) |
| 15.01.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 22.01.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 29.01.2016 | மாதாந்தப் பரீட்சை (Monthly Examinations) |
| 05.12.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 12.02.2016 | தமிழ்த்திறன் போட்டிகள் ('Tamil Thiran' Competitions) |
| 19.02.2016 | பாடசாலை இடைத்தவணை விடுமுறை (Half-Term Holidays) |
| 26.02.2016 | தமிழ்த்திறன் போட்டிகள் ('Tamil Thiran' Competitions) |
| 04.03.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 05.03.2016 | பரிசளிப்பு விழா (Awards Ceremony) |
| 11.03.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 18.03.2016 | தவணைக்கான பாடசாலை இறுதி நாள் + மாதாந்தப் பரீட்சை (End of Academic Term + Monthly Examinations) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு போற்றுவோம்

தை மாதம் பிறந்தாலே தமிழர்கள் வாழும் நாடுகளில் உள்ள அனைவரது மனங்களிலும் பொங்கல் என்ற எண்ணமும் தோன்றிவிடும்.


தை பிறந்துவிட்டது. வழியும் தெரிந்து விட்டது. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்று பெருமழையும், கடும் பனியுமாக ஆதவனை மறைத்திருந்த இயற்கை தை மாதத்தில் அவன் சுடரொளி பூமியில் பட்டு புத்துணர்வுபூக்க உதவுகிறது. பகலவனைக் கண்ட பயிர்கள் எல்லாம் ஆரோக்கியம் மேம்பட்டு, செழித்து வளர்ந்து அறுவடை செய்யப்படத் தயாராக இருக்கின்றன. தட்சிணாயணம் என்ற தன்னுடைய தென்திசைப் பயணத்தை முடித்துக்கொள்ளும் சூரியன் அங்கிருந்து வடக்குத் திசை நோக்கி உத்தராயணமாகப் பயணம் தொடங்கும் நாள்தான் தை மாதம் முதலாம் திகதி.

சூரியன் தினந்தோறும் கிழக்கில் உதித்து மேற்கில் மறைந்தாலும் நாளொன்றுக்கு ஒரு டிகிரி (Degree) வீதம் தெற்கு அல்லது வடக்கு நோக்கி நகர்கிறான். அதாவது ஆறுமாதம் தெற்கு நோக்கியும், ஆறுமாதம் வடக்கு நோக்கியும் பயணிக்கும் சூரியன் வடக்கு நோக்கிப் பயணிப்பதை உத்தராயணம் என்பார்கள். இவ்வாறு சூரியன் பயணத் திசை மாறுவதை "சங்கராந்தி" என்று சொல்கிறார்கள். இவ்வாறு சூரியனை வழிபடுவது இதிகாச, புராண காலங்களுக்கு முன்பிருந்தே நடைமுறையில் உள்ளது.

உயிர் லாழ்தலுக்கு இன்றியமையாத உணவுப் பொருட்களை, குறிப்பாக அரிசியை ஆதவன் தன்பொற்கரணங்களால் செறிவூட்டி மக்களுக்கு வழங்கும் இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்தும் தினமாகவே பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

ஞாயிறு என்பதும் சூரியனைக் குறிக்கும் சொல்தான். நம் மூதாதையர்கள் கிரகங்களின் பெயர்களை அடிப்படையாக வைத்தே வாரநாட்களுக்கும் பெயர் சூட்டியுள்ளனர். அவற்றில் முதலாவதாக வருவது ஞாயிறு.

ஆதிகாலத்தில் காலையில் உதிக்கம் சூரியன் மாலையில் மறைவதும் அதனால் இருள் சூழ்வதம் மக்களுக்குப் பயத்தை உண்டாக்கின. சூரிய ஒளியால் நடைமுறைவாழ்க்கை இயல்பாக இருப்பதையும், இருளில் தாங்கள் தட்டுத்தடுமாற வேண்டியிருப்பதையும் அவர்கள் கவனித்து தம்மை வழிநடத்துவது ஒளியே என்றுணர்ந்தே அந்த ஒளிக்கு நன்றி செலுத்தும் விதமாகவே சூரியனை வழிபட ஆரம்பித்தார்கள். அதுவே இன்றும் வழிவழியாகத் தொடர்கிறது.



# சிறிய நிகழ்ச்சியில் பெரிய படிப்பினை

**யேசுநாதரின் பொறுமை**

யேசுநாதர் மகாராஷ்ரத்தில் வாழ்ந்த மகான். அவர் தினந்தோறும் கோதாவரியில் நீராடி வருவார். ஒருநாள் அப்படி அவர் திரும்பிவரும் வழியில் நாஸ்திகன் ஒருவன் தன் வீட்டுமாடியிலிருந்து தனது வெற்றிலை எச்சிலை யேசுநாதரின் தலையில் துப்பினான். யார்? என்ன? என்று கூடப் பார்க்காமல் யேசுநாதர் அமைதியாகத் திரும்பிச் சென்று நீராடினார்.

திரும்பவும் அவர் நாஸ்திகனது வீட்டைத் தாண்டியபோது அவன் எச்சிலைத் துப்பினான். மறுபடியும் நீராடினார். இவ்வாறு 108 முறை நடந்தது. அதன் பின்புதான் நாஸ்திகன் யேசுநாதரது பெருமையை உணர்ந்தான். அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரிடம் மன்னிப்பு வேண்டினான்.

அவன் கூறியதைக் கேட்ட யேசுநாதர் "அப்பா உண்மையில் வணங்கத்தக்கவன் நீதான். உன்னால்தான் இன்று எனக்கு கோதாவாரியில் 108 முறை நீராடப் புண்ணியம் கிடைத்தது" என்றார். மகான்கள் தம்மை அற்பமாகவம், மற்றவர்களைப் பெரியவர்களாகவும் கருதுவார்கள்.

நாமும் இறைவனருளால் பொறுமையை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

**நாமத்தின் பெருமை**

துகாராம் ஒரு அனுபூதிமான். அவர் பகவானுக்கும் மக்களுக்கம் சேவை செய்து வந்தார். பகவானது திருநாமத்தின் பெருமையை அவர் தமது வாழ்வின் பன்முறை நிரூபித்துக் காட்டியுள்ளார். அத்தகைய ஒரு சம்பவத்தைக் காண்போம்.

ஒருநாள் பக்கத்து பக்கத்து வீடுகளில் வசித்த பெண்களுக்குள் பலத்தை சண்டை. அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே இடத்தில் வறட்டி தட்டினார்கள். உலர்ந்த பின் அவை ஒன்றோடொன்று கலந்து விட்டன. யாருடையது எவ்வளவு என்று தெரிந்து கொள்ள முடியாமல் சண்டை வந்து விட்டது.

துகாராம் அந்த வழியாகப் போனார். அவர் விடயத்தைக் கேட்டபின்னர் வறட்டிகளைப் பிரித்துத்தருவதாகச் சொன்னார். அவர் எல்லா வறட்டிகளையும் காதில் வைத்துப் பார்த்து இரண்டாகப் பிரித்தார். பிறகு "அம்மா! இருவரில் யார் வேலை செய்யும் போது விட்டல் விட்டல் என்று கூறினீர்களோ அவர்களது சறட்டி இடப்பக்கமும், மற்றவருடைய வறட்டிகள் வலப்பக்கமாவும் உள்ளன" என்றார். வேடிக்கை பார்த்தவர்கள் "சுவாமி! இதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? " என்றனர். நாம் இறைவனின் திருநாமம் சொல்லும் போது நாம அலைகள் சுற்றுப்புறம் முழுவதும் பரவும். நாம அதிர்வுகள் இருந்த வறட்டிகள் ஒருபுறமாவும். மற்றயவை மறுபுறமாகவும் போட்டுப் பிரித்தேன் என்றார்.

ஆண்டவன் நாம ஜெபம் செய்ய இடம் நேரம் பார்க்க வேண்டியதில்லை. ஆண்டவன் நாம ஜெபம் நமக்கு நன்மை செய்வதோடு சுற்றுச்சூழலையும் தூய்மையாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை வேறு மதிப்பு வேறு

அந்தக் காலத்தில் வீட்டுக்கு யாராவது பெரியவர்கள் வந்தால் கதிரையில் இருக்கின்ற சிறியவர்கள் எழுந்து நிற்க வேண்டும். அங்கு ஒரு நாற்காலி இருந்தால் பெரியவர்களை அமர இடம் கொடுத்து சின்னவர்கள் நிற்க வேண்டும். பெரியவர்கள் உள்ளே வரும் போதும், புறப்படும் போதும் எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும். இப்படிச் சில மரபுகள் இருந்தன. இவை அர்த்தமற்ற அடிமைத்தனம் என்கிறார்கள் இளைய தலைமுறையினர்.

பதவி அல்லது அதிகாரம் அல்லது பணத்தில் பெரியவர்களுக்கு வேண்டா வெறுப்பாக, அல்லது பயம் காரணமாக மதிப்பளிப்பதைக் கூச்சம் இல்லாமல் செய்யும் இளைய தலைமுறையினர் பதவி பணம் அதிகாரம் இல்லாத பண்பாளர்களான பெரியவர்களை ஏன் மதிக்க வேண்டும் என்கிறார்கள். அவர்கள் வரும் பொழுது நாம் எழுந்து நிற்காவிட்டால் அவர்கள் என்ன செய்துவிட முடியும் என்ற கேள்வி கேட்கிறார்கள்.

ஆங்கிலத்தில் Values என்ற ஒரு சொல் இருக்கிறது. அது மதிப்பைக் குறிப்பது. Price என்று இன்னொரு சொல் இருக்கிறது. அது விலையைக் குறிப்பது. எந்தப் பொருளுக்குமே விலை ஒரு பெரிய விடயமல்ல. மதிப்புத் தான் முக்கியம். இன்று எல்லோரும் எந்தப் பொருளை எடுத்தாலும் விலையைத் தான் கவனிக்கிறார்கள். அதன் மரியாதையை அல்ல.

Price முக்கியமல்ல Value தான் முக்கியம் என்பதை இளைய தலைமுறை அவசியமாகப் புரிந்து கொள்ளவேண்டும். பெரியவர்களை மதிப்பதில் எமது பாரம்பரியம், பண்பாடு என்று பல விடயங்கள் அடங்கி இருக்கின்றன.

மகாபாரதத்திலே ஒரு நிகழ்ச்சி. பாரத யுத்தகளத்திலே மாவீரன் கர்ணனைத் தருமர் வெல்ல நினைத்தார். ஆனால் எதிர்மறையாக முடிவு ஆனது. கர்ணன் தருமரை வென்றான். அவன் நினைத்திருந்தால் தருமரைக் கொன்று விட முடியும். ஆனால் குந்தி "அருச்சுனனைத் தவிர மற்ற நால்வரையும் கொல்ல வாய்ப்பு வந்தாலும் கொல்லக்கூடாது" என்று கர்ணனிடம் சத்தியம் வாங்கியிருந்தாள். அதற்குக் கட்டுப்பட்டுத் தன் தம்பி தருமனைக் கர்ணன் கொல்லாமல் ஓட ஓட விரட்டினான்.

அவமானத்தில் பாசறை நோக்கி ஓடிய தருமர் வழியில் அருச்சுனனைப் பார்த்து, "எப்படியாவது கர்ணனைக் கொன்ற அந்த வெற்றிச் செய்தியுடன் என்னை வந்து பார்" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டுச் சென்றார். ஆனால் அருச்சுனன் கர்ணனுடன் போரிடப் போனபோது அருச்சுனன் பட்ட அவஸ்த்தை சொல்லில் அடங்காது. அவனையறியாது பாசம் படை நடத்தியது.

கர்ணனைக் கொல்ல முகம் பார்த்தால் கர்ணன் முகம் தருமருடைய முகமாகத் தெரிகிறது. முகத்தைத் தவிர்த்து மார்பைப் பார்த்தால் அது பீமன் மார்பாக மின்னியது. அதையும் தவிர்த்து அருச்சனன் கர்ணனின் கால்களைப் பார்த்தால் அது அவன் நாளும் விழுந்து வணங்கும் தாய் குந்தியின் கால்களாய்த் தெரிகிறது. காரணம் கர்ணனும் குந்தியின் மகன் தானே. எனவே சகோதரனாய் தோன்றிய கர்ணனைக் கொல்லாமல் தடுமாறிப் பாசறைக்குத் திரும்பினான் அருச்சுனன்.

உண்மை அறிந்ததும் அருச்சுனனைக் கோபமாகத் திட்டினார் தருமர். இவனை நம்பி போரை இழுத்துக் கொண்டோமே என்ற நொந்து அருச்சுனன் வில்லைப் பழித்துக் கேலி பேசினார். அவ்வளவுதான் "தன் வில்லை யார்பழித்தாலும் கொல்லுவேன்" என்று சபதம் செய்திருந்த அருச்சுனன் வில்லை எடுத்துக் கொண்டு தருமரைக் கொலை செய்யத் துணிந்தான். ஆனால் பாசம் தடுத்தது.

"கண்ணா என் சபதப்படி தருமரைக் கொல்ல வேண்டும். ஆனால் அண்ணனைக் கொல்ல மனம் வரவில்லையே! கொல்லவும் வேண்டும், ஆனான் தருமர் சாகவும் கூடாது. என்ன செய்வது? " என்று புலம்பினான் அருச்சுனன். மாயக் கண்ணன் சொன்ன பதில் "கொல்லாமல் கொல்லலாம். சாகாமல் வாழலாம். தருமர் உன்னைவிடப் பெரியவர். பன்மையில் நீங்கள் என்று அழைக்கப்பட வேண்டியவர். அவரை ஒருமையில் நீ என்று அழைத்தால் அவரை நீ கொன்றதற்குச் சமம்" என்றான் கண்ணன்.

நீங்கள் என்று பன்மையில் அழைக்க வேண்டிய தருமரை "நீ" என்று ஒருமையில் தருமரை அழைத்துக் கொல்லாமல் கொன்ற அருச்சுனன், "பெரியவரை அவமதித்த நான் இனி எப்படி உயிர் வாழ முடியும். எனவே தற்கொலை செய்து கொள்வேன்" என்ற வாளை உருவித் தற்கொலை செய்து கொள்ளப் போனான். "நில்" என்று தடுத்த கண்ணன் "எப்படித் தருமரைக் கொல்லாமல் கொன்றாயோ அப்படி உன்னைச் சாகாமல் சாகடித்துக் கொள்" என்று சிரித்தான். "எப்படி?" என்றான் அருச்சுனன். "தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது தற்கொலைக்குச் சமம். நீயே உன்னைப் புகழ்ந்து கொள். தற்புகழ்ச்சி தற்கொலையாகிவிடும்" என்றான்.

**பெரியோரை அவமதிப்பது ஒருமையில் பேசுவது கொலை. தற்புகழ்ச்சி என்பது தற்கொலை. கொஞ்சங்கூட கூச்சம் இல்லாமல் ஓயாமல் தன்னையே புகழ்ந்து கொள்ளும் ஒரு சில மனித ஜடங்களுக்கு இந்த மகாபாரதக் கதையை எப்படிச் சொல்வது? யார் சொல்வது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூல் வெளியீட்டில் எமது கழகப் பொருளாளரான திரு குமார் சிங்காரவேலுவிடமிருந்து திரு சீவரத்தினம் முதற்பிரதியை பெறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசெக்ஸ் தமிழ்க் கழகம் நடாத்திய நூல் வெளியீட்டு விழா

இலண்டனிலே தமிழ்ப் பாடசாலையொன்று தமிழ் நூல்களை வெளியீடு செய்து வைத்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது. இத்தமிழ்ப் பாடசாலை எல்லா விடயத்திலும் மற்றய தமிழ்ப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் பொழுது சற்றே வித்தியாசமாகவே தொழிற்பட்டு வருகின்றமை இந் நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை நிகழ்த்திய அதன் தலைவர் திரு க. ஜெயகுமார் அவர்களின் உரையில் இருந்து தெரிய வந்தது. நீங்கள் நினைக்கலாம் அப்படியென்ன வித்தியாசம் என்று.

இப்படசாலை கடந்த பதினேழு ஆண்டுகளாக கிழக்கு இலண்டனிலே இயங்கிவரும், சுமார் 400 மாணவர்கள் தமிழ்க் கல்வி பயிலும் ஒரு நிறுவனம். அப்பாடசாலை இலண்டனிலே முதன் முறையாக மாணவர்களுக்கிடையே தமிழ்த் திறன் போட்டிகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக நாடாத்துவதுடன் பரிசளிப்பு வைபவத்தின்போது இலண்டனில் தமிழுக்காக அயாராது சேவை செய்பவர்களுக்கு அவர்களது வாழ்நாள் சேவையைப் பாராட்டியும் கௌரவித்தும் வருகின்றமை பெரிதும் பாராட்டுக்குரிய விடயம். அத்துடன் தமிழ்ப் பாடசாலையில் ஓர் நடமாடும் நூல்நிலையத்தையும் அமைத்து அங்கு கல்விபயிலும் மாணவர்களை வாசிப்பதற்கு ஊக்குவிக்கின்றமை மற்றய பாடசாலைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அந்த வகையிலே கிழக்கு இலண்டனில் வாழும் தமிழ் அறிஞர்,சட்டத்தரணி திரு செ சிறீஸ்கந்தராசா அவர்கள் அண்மையில் எழுதிய நூல்களான இனிக்காதா இலக்கணம், ஆங்கிலமூலம் தமிழ்,ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும், பேசாதவை பேசியவை என்ற நான்கு நூல்களையும் எசெக்ஸ் தமிழ்க் கழகம் வெளியீடு செய்து வைத்து மேலும் ஒரு புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.

இந்நூல் வெளியீடு பற்றி IBC தமிழ் தொலைக்காட்சிமூலம் தெரியவந்து அங்கே சென்றிருந்தேன். தொலைக்காட்சியில் 14.11.2015 சனிக்கிழமை நிகழ்சிகள் 5.00 மணிக்கு ஆரம்பமாகும் என்று சொல்லியிருந்த போதும் மாலை ஆறு மணியளவில் இவ்விழா ஆரம்பமாகியது.

நூல் வெளியீட்ட விழா தமிழ்ப் பாடசாலையே நடாத்தியதால் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளோடு ஆரம்பமாகிய போதும் சற்றே வித்தியாசமாக தமிழ்ப பாடசாலை ஆசிரியர்கள் அவர்களது தமிழ்க் கழக கீதத்தைப் பாடியது நன்றாக அமைந்திருந்தது. மாணவர்களின் நடனம் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்து.

நூல் வெளியீட்டில் நூல்களைப்பற்றிய விளக்கங்கள் மிகவும் இரத்தினச் சுருக்கமாக அதனை வழங்கியவர்களால் வழங்கப்பட்டது வழமைக்கு மாறாக இருந்தது. இனிக்காத இலக்கணம் பற்றி கலசம் ஆசிரியர் திரு. ஜெகதீஸ்வரம்பிள்ளையும், ஆங்கிலமூலம் தமிழ் பற்றி இலண்டன் தமிழ் நிலையத் தலைமை ஆசிரியர் திரு அனந்தசயனனும், ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும் பற்றி பல்கலைக்கழக விரிவுரையாளரும் நூல் விமர்சகருமாகிய திரு நித்தியானந்தனும், பேசாதவை பேசியவை பற்றி கவிஞர் திரு கருணானந்தராசாவும் விளக்கங்கள் கொடுத்தார்கள்.

நூல் வெளியீடு தொலைக்காட்சியில் சொன்னதைப் போன்று சற்றே வித்தியாசமாக மேற்கூறிய விளக்கவுரைகளைத் தொடர்ந்து எசெக்ஸ் தமிழ் அக்கடமியின் தலைமை ஆசிரியர் திருமதி உமா ஜெயகுமார் வெளியீட்டுரை நிகழ்த்த எசெக்ஸ் தமிழ்க் கழக பொருளாளர் திரு குமார் சிங்காரவேலுவினால் வெளீயீடு செய்து வைக்கப்பட்டது. முதல் பிரதியை இலண்டன் முத்துமாரியம்மன் ஆலயத் தர்மகத்தா திரு சீவரத்தினம் பெற்றுக் கொண்டதையடுத்து மண்டபத்தில் இருந்த அனைத்துப் பார்வையாளர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நூல்களில் இனிக்காத இலக்கணம், ஆங்கிலம் மூலம் தமிழ் என்ற இரு நூல்களும் இலண்டனில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய முக்கிய நூல்கள் என்ற ரீதியிலேயே இந் நூல் வெளியீட்டை எசெக்ஸ் தமிழ்க் கழகம் நடாத்தியது. ஆந்த வகையிலே அன்றைய பார்வையாளர்கள் பெரும்பாலானோர் தமிழ்ப் பாடசாலை ஆரிரியர்கள், நிருவாகத்தினர், இலக்கிய ஆர்வலர்கள்,மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் என்று இருந்தனர்.

நூல் விற்பனையைத் தொடர்ந்து பார்வையாளர்கள் அந்நூல்களைப்பற்றிய சந்தேகங்கள், விளக்கங்கள் பற்றி அந்நூல்களை எழுதிய ஆசிரியரிடம் கேள்விகள் கேட்க சற்றும் சழைக்காமல் அவ்வினாக்களுக்கு விடையளித்த திரு சிறீஸ்கந்தராசாவின் தமிழ்ஆழுமை, தமிழறிவு என்னைப் புல்லரிக்கவைத்துவிட்டு. இரண்டுமணிநேரம் கேள்வி பதிலுடன் போனது தெரியாவிட்டாலும் தமிழிலுள்ள பல சந்தேகங்களுக்கு விடை கிடைத்தமை நான் செய்த பெரும் பாக்கியம்.

வாழ்க எசெக்ஸ் தமிழ்க்கழகம் மேலும் பல நற்பணிகள் எமது சமுதாயத்துக்கு உங்களால் செய்யப்படவேண்டும் என்று வாழ்த்தி வீடு சென்றேன்.

**விமர்சனம்: திரு. அ ஜெயகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESSEX TAMIL SOCIETY
# ACCOUNTS OF 2015

**ESSEX TAMIL SOCIETY**
PROFIT AND LOSS ACCOUNT
**FOR THE YEAR ENDED 31.05.2015**

| | |
|---|---|
| **INCOME** | £ |
| School Fees | 16,992 |
| Tamil Books Sale | 1,250 |
| Valentine High School Hall Hire | 264 |
| Kalaivila Canteen Sale | 800 |
| Other Income | 380 |
| Exam Fees | 3,870 |
| BT Refund | 33 |
| **TOTAL INCOME** | **23,589** |
| **EXPENSES** | |
| Tamil Teachers Travel Expenses | 6,498 |
| Dance Teacher Payment | 725 |
| Mirutankam Teacher Payment | 175 |
| Printing, Postage & Stationery | 1,220 |
| School Rent | 7,620 |
| Telephone | 447 |
| Kalaivila Expenses | 800 |
| Christmas Expenses 2014 | 187 |
| Insurance | 424 |
| Tamil Books Purchase | 1,500 |
| Exam Hall Hire | 400 |
| Donation Jaffna Hospital Heart Foundation | 100 |
| Bank Charges | 3 |
| **TOTAL EXPENSES** | **20,099** |
| **INCOME OVER EXPENSES** | **3,490** |

2014-15 ஆண்டுக்கான எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் வரவு செலவு கணக்கு விபரம் எமது கணக்காய்வாளர்களால் பரிசீலிக்கப்பட்டு இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

**கழகப் பொருளாளர்**

## ESSEX TAMIL SOCIETY — Balance Sheet
**AS AT 31-05-2015**

| | | | |
|---|---|---|---|
| **Assets** | | | **2015** |
| ***Fixed Assets*** | | | |
| | Fixtures, Fittings & Equipment | £ | 3,500 |
| ***Current Assets*** | | | |
| | Cash at bank | £ | 7,832 |
| **Total Assets** | | **£** | **11,332** |
| ***Current Liabilities*** | | | |
| | School Rent Payable | £ | 2,300 |
| | Exam Fees Payable | £ | 2,960 |
| **Total Assets Less Current Liabilities** | | **£** | **6,072** |
| ***Financed By*** | | | |
| | Profit & Loss B/F | £ | 6,072 |
| **Profit & Loss B/F** | | **£** | **6,072** |

மேலதிகமாக இது சம்பந்தமாக ஏதாவது விளக்கங்கள் தேவைப்படின் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எசெக்ஸ் தமிழ்க் அக்கடமி

## ESSEX TAMIL ACADEMY

64 Glencoe Avenue, Ilford, Essex IG2 7AN
Tel: 020 8599 8191 Fax: 020 8599 8191
E-mail: etsociety@hotmail.co.uk
Website : www.essextamilsociety.com

எமது தமிழ்ப் பாடசாலையான எசெக்ஸ் தமிழ் அக்கடமியில் வளர்நிலை 1-12 வரையும் அனைத்துலகத் தமிழ்வழி பொதுத தேர்வுப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்படுத்தப் பட்டு முதன்மைச் சித்தி பெறுகிறார்கள்.





வருடங்தோறும் November மாதத்தில் **விவேகானந்த சபையின் சைவ நெறிப் பரீட்சைக்கு** மாணவர்கள் தயார் படுத்தப்படுகிறார்கள். வகுப்புக்களில் மாணவர்களுக்குத் தேவார பண்ணிசையும், சைவசமய பரீட்சைக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.


எசெக்ஸ் தமிழ் கழகம் வருடந்தோறம் விளையாட்டுப் போட்டியை நடாத்தி தமிழ்ப் பாடசாலைப் பிள்ளைகளை **விளையாட்டுப் போட்டிகளில்** ஊக்குவிக்கிறது. உங்கள் பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் பாடசாலை அனுமதிக்கும் தயவு செய்து **020 8559 8191** உடன் தொடர்பு கொள்ளவும்.





எசெக்ஸ் தமிழ் அக்கடமி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5:00 மணி முதல் மாலை 08:30 மணிவரை **தமிழ், நடனம், வயலின், மிருதங்கம், Keyboard,** வகுப்புக்கள் **Newbury Park Primary School, Perrymans Farm Road, Ilford** இல் கடந்த 17 ஆண்டுகளாள நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள் UCAS points எடுத்து University அனுமதிக்கு உதவுகின்றது **தமிழ்மொழி Cambridge University** பரீட்சைக்கு ஆண்டு தோறும் மாணவர்களை தயார்செய்து "A" தரச்சித்தி பெற வழிவகுக்கின்றது.



GUARANTEE 100% SATISFACTION

உங்கள் பிள்ளைகளின் அனுமதிக்கு மேற்காணும் தொலைபேசி எண் அல்லது மின் அஞ்சலில் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு www.essextamilsociety.com என்ற இணையதளத்தில் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இது ஒரு எசெக்ஸ் தமிழ் கழகத்தின் தயாரிப்பு.**

© Essex Tamil Society 2016